பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண். 124 நாள்:30.08.2018

## ஜி.கே.எம். காலனி மின் மயானபூமியில் பராமரிப்பு பணிகள் தொடர்ந்து நடைபெறவுள்ளதால், பொதுமக்கள் அருகில் உள்ள திரு.வி.க.நகர் (தாங்கல்) மற்றும் எம்.பி.எம். தெரு மயானபூமியை பயன்படுத்திக் கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி அறிவிப்பு

= = = =

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை, திரு.வி.க.நகர் மண்டலம், கோட்டம்–65ல் உள்ள ஜி.கே.எம். காலனி எரிவாயு மயான பூமியில் பராமரிப்பு பணிகள் 15.08.2018 முதல் நடைபெற்று வருகிறது. மேலும், பராமரிப்பு பணியானது தொடர்ந்து நடைபெற்று வருவதால் 07.09.2018 வரை ஜி.கே.எம். காலனி எரிவாயு மயான பூமி இயங்காது.

மேலும், பராமரிப்பு பணிகள் நடைபெறும் நாட்களில் பொதுமக்கள் அருகிலுள்ள கோட்டம்–68, திரு.வி.க.நகர் (தாங்கல்) மின் மயானபூமி மற்றும் கோட்டம்–70, எம்.பி.எம். தெரு எரியூட்டக மயானபூமியை பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி